# ≡ தானியேல் ≡

**வேத ஆராய்ச்சி**

**அதிகாரம் 3**



அருமையானவர்களே, முதல் அதிகாரத்தில் தானியேலையும் அவன் நண்பர்களின் சாப்பாடு மற்றும் எல்லாவற்றையும் பாபிலோனியர் மாற்றினாலும் அவர்களுடைய இருதயத்தை மாற்ற முடியவில்லை. அது தேவனுக்கு நேராக திருப்பப்பட்டிருந்தது என்பதை நாம் கற்றுக்கொண்டோம். இரண்டாம் அதிகாரத்தில் இனி என்ன சம்பவிக்கும் என்று யோசித்த நேபுகாத் நேச்சாருக்கு தேவன் வருங்காரியங்களை வெளிப்படுத்தினார். அதன் அர்த்தத்தை தானியேல் மூலமாக பெற்றுக்கொண்ட ராஜாவோ தேவ ராஜ்யத்திற்கு தன்னை அர்ப்பணிக்கவில்லை. ஆனாலும் இப்படிப்பட்ட மறைபொருளை விளக்கிய தானியேலுக்கும் அவன் நண்பர்களுக்கும் பதவி உயர்வு அளித்தான். அந்த சொப்பனத்தில் கண்ட அந்த சிலையின் மூலமாக தன்னை கறைப்படுத்திக் கொண்டதையும் அதினிமித்தம் தேவஜனங்களுக்கு வந்த கண்ணி உபதேசத்தையும் அதன் மூலமாக வந்த நெருக்கங்களையும் நாம் மூன்றாம் அதிகாரத்தில் பார்க்கலாம்.

அருமையானவர்களே, உங்களுக்கோர் வேண்டுகோள். இந்த வேதாகம ஆராய்ச்சியில் ஆர்வம் கொண்டு படிக்கிற உங்களை மனதார வாழ்த்துகிறோம். ஆனாலும் நீங்கள் இதை படிக்கும்பொழுது ஏதாவது ஒரு பகுதியில் தொடப்பட்டு கிறிஸ்துவின் சாயலாக மாற வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

## 1. பொற்சிலை (வச 1 - 6)



ஏன் திடீரென பொற்சிலையை நிறுத்த வேண்டும். ஏன் எல்லாரும் வணங்க வேண்டும் என்ற கேள்வி எல்லாருடைய உள்ளத்திலும் எழலாம்.

அருமையானவர்களே! 2-ம் அதிகாரத்தில் நாம் படித்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். இனி சம்பவிக்கப் போகிற காரியங்களை யோசிக்கும் பொழுது அவர் ஒரு சொப்பனம் கண்டார். அதில் அவர் ஒரு பெரிய சிலையை கண்டார். அதன் தலை பொன்னால் செய்யப்பட்டதாயிருந்தது. அது பாபிலோனிய அரசு என்றும், அது முடிவுக்கு வரப்போகிறது என்பதை அறிந்திருந்தும் நேபுகாத்நேச்சாரோ பாபிலோனியப் பேரரசு யாராலும் அசைக்கமுடியாது என்பதை எடுத்துக் காட்டவே 60 முழ உயரமும், ஆறு முழ அகலத்திலும் ஒரு பொற்சிலையை ஏற்படுத்தினார்.

### முத்துக்கள்....

நேபுகாத் நேச்சார் இப்படிப்பட்ட காரியங்களை செய்ய அவனுக்கு பின்னாடி அவனை ஊக்குவித்தது பெருமை.

1. ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அறுபதுமுழ உயரமும் ஆறு முழ அகலமுமான ஒரு பொற்சிலையைப் பண்ணுவித்து, பாபிலோன் மாகாணத்திலிருக்கிற தூரா என்னும் சமபூமியிலே நிறுத்தினான்.
2. பின்பு ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தேசாதிபதிகளையும், அதிகாரிகளையும், தலைவரையும், நியாயாதிபதிகளையும், பொக்கிஷக்காரரையும், நீதிசாஸ்திரிகளையும், விசாரிப்புக்காரரையும், நாடுகளிலுள்ள உத்தியோகஸ்தர் யாவரையும் நேபுகாத்நேச்சார் ராஜா நிறுத்தின சிலையின் பிரதிஷ்டைக்கு வந்து சேரும்படி அழைத்தனுப்பினான்.
3. அப்பொழுது தேசாதிபதிகளும், அதிகாரிகளும், தலைவரும், நியாயாதிபதிகளும், பொக்கிஷக்காரரும், நீதிசாஸ்திரிகளும், விசாரிப்புக்காரரும், நாடுகளிலுள்ள உத்தியோகஸ்தர் யாவரும், ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின சிலையின் பிரதிஷ்டைக்கு வந்து சேர்ந்து, நேபுகாத்நேச்சார் நிறுத்தின சிலைக்கு எதிராக நின்றார்கள்.
4. கட்டியக்காரன் உரத்த சத்தமாய்: சகல ஜனங்களும், ஜாதிகளும், பாஷைக்காரருமானவர்களே, உங்களுக்கு அறிவிக்கப்படுகிறது என்னவென்றால்:
5. எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தை நீங்கள் கேட்கும் போது, நீங்கள் தாழவிழுந்து, ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ளக் கடவீர்கள்.
6. எவனாகிலும் தாழ விழுந்து, அதைப் பணிந்துகொள்ளாமற்போனால், அவன் அந்நேரமே எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்படுவான் என்றான்.

பெருமை மனிதனின் உள்ளத்தின் ஆழத்தில் தனக்கு நிகர் உலகில் வேறு யாரும் இல்லை என்று, வஞ்சக உபதேசம் செய்து அவனை மயக்கிவிடு கிறது. என்றாவது ஒரு நாள் மயக்கம் தெளியும்பொழுது அவனின் உண்மை யான நிலை அவனுக்கு தெரிந்து விடும்.

ஒருவேளை இதை படித்துக்கொண்டிருக்கிற நாம் யாருக்காவது பெருமை என்னும் பித்தம் இரத்தத்தோடு கலந்திருக்கிறதா... கவனம் தேவை

## 2. உலகம் உன்னை சோதிக்கும் பொழுது (வச 7-15)

இந்த சம்பவம் பாபிலோனில் சிறைப்பட்டுப் போன இஸ்ரவேலருக்கு உபத் திரவம் அல்ல. ஆனால் இது ஒரு கண்ணியான உபதேசமாக மாறியது. இன்னொரு நாட்டில் சிறைக்கைதிகளாக இருக்கும் இஸ்ரவேலர் ராஜாவின் கட்டளையால், அதாவது பொற்சிலையை வணங்குகிற காரியத்தில் என்ன செய்ய முடியும்? ஒருவேளை ராஜாவின் கட்டளையை நிறைவேற்றினால், தேவனின் கட்டளையான முதல் இரண்டையும் நிறைவேற்ற முடியாதே!

சில நேரங்களில் கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த உலக அதிபதிகளால் ஏற்படுத்துகிற சட்ட திட்டங்களுக்கு கீழ்படிய முடியாதபடி அது தேவனின் கட்டளைக்கு மாறாக இருக்கிறது.

பரிசுத்த வேதாகமத்தில் அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லும் பொழுது மனிதனுக்கு அல்ல தேவனுக்கே கீழ்ப்படிய வேண்டும் (அப் 7:18-20; 5:27-29) என்பதை பார்க்க முடியும். அன்று அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படிதலே உத்தமமென்று கருதினர்.

### முத்துக்கள்....

உலகம் உங்களுக்கு முன்பாக வைக்கும் பரிட்சையில் மனுஷருக்கு அல்ல தேவனுக்கே பயப்பட வேண்டும். உதாரணமாக ஒருவர் புதிதாக இயேசுவை தேவனாக அங்கீகரித்து ஆலயத்துக்கும் போக வேண்டும். ஆனால் அவர் கள் வீட்டில் நீ தேவாலயத்திற்கு போ, ஆனால் இதையும் செய்ய வேண்டும் என்று எங்கேயோ ஒரு அழுத்தத்தை உணர்கிறீர்களா? கவனம் தேவை. இது ஒரு கண்ணி உபதேசம். ஒருவேளை இதில் என்ன தவறு இருக்கிறது என்று எண்ணி அதற்கு தங்களை அர்ப்பணிக்கிறவர்களின் உள்ளான மனி தன் பெலவீனனாகிவிடுவான். கவனம் தேவை

## அக்கினி தழலில் உண்மை விசுவாசம்:(3:16-23)



தேவனுக்கு ஒப்புக்கொடுத்த இந்த மூவரின் விசுவாசத்தை பார்க்கும் பொழுது நமக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது அல்லவா! ராஜாவுக்கு இந்த காரியத்தில் இணங் காமல் இருப்பதற்கு தேவன் அவர்களுக்கு தைரியத்தையும், பெலனையும் தந்ததிற்காக கர்த்தருக்கு நன்றிசெலுத்துகிறேன்.

ஒன்றை உங்கள் உள்ளத்தில் ஆழ பதிக்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட நெருக்கங் களில் நாம் இருப்போமானால் உடனடியாக தேவ பிள்ளைகளோடு தொலைபேசியின் மூலமாகவும், மென் கடிதத்தின் வழியாக வும், தொலைபேசி வழியாக குறுசெய்திகள் அனுப்பியும் எப்படியாவது ஜெபிக்க கேட் போம் இல்லையா?

7. ஆதலால் சகல ஜனங்களும், எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம் முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத் தத்தைக் கேட்டவுடனே, சகல ஜனத்தாரும் ஜாதியாரும் பாஷைக் காரரும் தாழ விழுந்து, ராஜாவா கிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொண் டார்கள்.

8. அச்சயமத்தில் கல்தேயரில் சி லர் ராஜசமுகத்தில் வந்து, யூதர் பேரில் குற்றஞ்சாற்றி,

9. ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரை நோக்கி: ராஜாவே, நீர் என்றும் வாழ்க.

10. எக்காளம், நாகசுரம், கின் னரம், வீணை, சுரமண்டலம், தம் புரு முதலான சகலவித கீதவாத் தியங்களின் சத்தத்தையும் கேட்கிற எந்த மனுஷனும் தாழவிழுந்து, பொற்சிலையைப் பணிந்துகொள்ள வேண்டுமென்றும்,

11. எவனாகிலும் தாழ விழுந்து பணிந்துகொள்ளாமற்போனால், அவன் எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்படவேண்டு மென் றும், ராஜாவாகிய நீர் கட்டளையிட் டீரே.

12. பாபிலோன் மாகாணத்தின் காரியங்களை விசாரிக்கும்படி நீர் ஏற்படுத்தின சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்னும் யூதரான மனுஷர் இருக்கிறார்களே; அவர் கள் ராஜாவாகிய உம்மை மதிக்க வில்லை; அவர்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்யா மலும், நீர் நிறுத்தின பொற்சிலை யைப் பணிந்துகொள்ளாமலும் இருக்கிறார்கள் என்றார்கள்.

13. அப்பொழுது நேபுகாத்நேச்சார் உக்கிரகோபங்கொண்டு சாத்ராக் கையும், மேஷாக்கையும், ஆபேத் நேகோவையும் அழைத்துக்கொண் டுவரும்படி கட்டளையிட்டான்; அவர்கள் அந்தப் புருஷரை ராஜா வின் சமுகத்தில் கொண்டுவந்து விட்டபோது,

14. நேபுகாத்நேச்சார் அவர்களை நோக்கி: சாத்ராக், மேஷாக், ஆபே த்நேகோ என்பவர்களே, நீங்கள் என் தேவர்களுக்கு ஆராதனை செய்யாமலும் நான் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள் ளாமலும் இருந்தது மெய்தானா ?

15. இப்போதும் எக்காளம், நாக சுரம், கின்னரம், வீணை, சுரமண்ட லம், தம்புரு முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தையும் நீங்கள் கேட்கும்போது, தாழ விழு ந்து, நான் பண்ணிவைத்த சிலை யைப் பணிந்துகொள்ள

ஜெபிக்கிறவர்கள்...

காலை வேளைக்குள் ராஜாவின் எண்ணத்தைமாற்றும் என்று ஒரு கூட்டம்,

ஆனால் தேவனோ இல்லை என்ற பதில்.

ஆண்டவரே உமது உண்மையுள்ள ஊழியக்காரரின் குடும்பத்தை பார்த்து அவர்களுக்கு இரங்கும் என்று ஒரு கூட்டம்,

ஆனால் தேவனோ அதற்கு மறுஉத்திரமாக இல்லை என்ற பதில்.

ஐயோ! ஆண்டவரே அக்கினி சூளையில் போட நேரம் ஆகிவிட்டதே....

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அந்த தீயை கடிந்து கட்டி அப்புறப்படுத்துகிறேன்...என்றும் ஒரு கூட்டத்தின் ஜெபம்

ஓ! தேவனிடத்திலிருந்து பதில் இல்லை. மாறாக இன்னும் அக்கினியின் உக்கிரகம் ஏழு மடங்கு கூட்டப்பட்டது

தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகள் அல்ல.

தேவன் அவர்களைப்பார்த்து இப்படியாக பதில் கொடுத்தார். என் பிள்ளைகளே! என்னுடைய பரிபூரணசித்தம் எல்லாம் அவர்கள் அக்கினி சூளையின் வழியாக கடந்து செல்லவேண்டும் என்பது தான். அதோடு தேவனாகிய நான் அவர்களுக்காக ஒரு காரியத்தை வைத்திருக்கிறேன். அது அக்கினியின் மத்தியில்தான் என்றார். ஒரு வேளை நமக்கு ஒரு அதிர்ச்சியாக இருக்கலாம். ஆனால் அதுதான் உண்மை.

## முத்துக்கள்....

நம்முடைய ஜெபங்களெல்லாம் இன்று அதிகமாக ஆண்டவரிடம் இதை செய்யும் அதை செய்யும் என்ற சொந்த விருப்பங்களே விண்ணப்பங்களாக காணப்படுகிறது.

அன்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக பிதாவே, இந்த பாத்திரம் நீங்கக்கூடுமானால் நீங்கட்டும். ஆனாலும் உம்முடைய சித்தப்படி ஆகக்கடவது என்று விண்ணப்பித்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நம்புகிறோம். ஹலோ! இயேசு சிலுவையில் அறையப்படுவதுதான் தேவ சித்தம். அங்கேதான் நமக்கு மீட்பு.

## அக்கினி ஜீவாலை நடுவில் (3:24-25)

ஏசா 43:2-ல் அக்கினி ஜீவாலை உன் பேரில் பற்றாது என்று நம்முடைய ஆண்டவர் சொன்ன வார்த்தை நேரடியாக நிறைவேறுவதை நாம் பார்க்கலாம். அந்த அக்கினி ஜீவாலையால் அவர்களை கட்டியிருந்த கயிறை மாத்திரமே எரித்து போட முடிந்தது. அன்று பவுலும், சீலாவும் தொழுமரத்திலே கட்டப்பட்டிருந்தபொழுது அந்த சிறைச்சாலையில் தேவன் ஒரு பெரிய அசைவைகொண்டு வரவில்லையா? பாருங்கள் நம்முடைய ஆண்டவர் எவ்வளவு நல்லவர். சரிதானே.



ஏன் இந்த அக்கினி ஜீவாலையில் இவர்கள் சோதிக்கப்பட வேண்டும் என்ற கேள்வி நம்முடைய உள்ளத்தில் எழக்கூடும். அருமையானவர்களே! அது அவர்களுக்காகவே தான். தாங்கள் ஆராதிக்கிற தேவன் ஜீவனுள்ளவர் என்பதை அவர்களுக்கு அன்று தேவன் ஊர்ஜிதப்படுத்தினார். அதோடு அன்று

ஆயத்த மாயிருந்தால் நல்லது; பணிந்து கொள்ளாதிருந்தீர்களேயாகில், அந் நேரமே எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்படுவீர்கள்; உங்களை என் கைக்குத் தப்புவிக்கப் போகிற தேவன் யார் என்றான்.

16. சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ என்பவர்கள் ராஜாவை நோக்கி: நேபுகாத்நேச்சாரே, இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை.

17. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்.

18. விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள்.

19. அப்பொழுது நேபுகாத்நேச்சாருக்குக் கடுங்கோபமுண்டு: சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுக்கு விரோதமாய் அவனுடைய முகம் வேறுபட்டது; சூளையைச் சாதாரணமாய்ச்சூடாக்குவதைப்பார்க்கிலும் ஏழுமடங்கு அதிகமாய்ச் சூடாக்கும்படி உத்தரவு கொடுத்து,

20. சாத்ராக், மேஷாக், ஆபேத நேகோ என்பவர்களை எரிகிற அக்கினிச்சூளையிலே போடுவதற்கு அவர்களைக் கட்டும்படி, தன் இராணுவத்தில் பலசாலிகளாகிய புருஷருக்குக் கட்டளையிட்டான்.

21. அப்பொழுது அவர்கள் தங்கள் சால்வைகளோடும் நிசார்களோடும் பாகைகளோடும் மற்ற வஸ்திரங்களோடும் கட்டப்பட்டு, எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்பட்டார்கள்.

22. ராஜாவின் கட்டளை கடுமையாயிருந்தபடியினாலும், சூளை மிகவும் சூடாக்கப்பட்டிருந்தபடியினாலும், அக்கினி ஜுவாலையானது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைத் தூக்கிக்கொண்டுபோன புருஷரைக் கொன்று போட்டது.

23. சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ என்னும் அந்த மூன்று புருஷரும் கட்டுண்டவர்களாய் எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே விழுந்தார்கள்.

அவர்கள் தேவ பாதுகாப்பையும், அவரின் ஐக்கியத்தையும், அவரின் சமாதானத்தையும் அந்த நெருக்கத்தின் மத்தியில் அதிக அதிகமாக உணர கர்த்தர் கிருபைசெய்தார்.

இந்த சோதனையில் தான் தேவகுமாரனுக்கு ஒத்த சாயலாக நாலாவது நபர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அவர்கள் நடுவிலே உலாவிக் கொண்டிருந்ததை நேபுகாத்நேச்சார் கண்டு கொள்ள அது ஏதுவாக இருந்தது.

## முத்துக்கள்....

தேவனுக்காக வாழும் பரிசுத்தத்திற்காகவும், பக்திவைராக்கியத்திற்காக வரும் எல்லாவித சோதனைகளிலும் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய நடுவில் இருப்பார் என்பதை நாம் விளங்கிக்கொள்ள முடியும்.

கர்த்தர் நமக்கு வைத்திருக்கிற உயர்ந்த திட்டங்களை நாம் அறியாமல், அந்த காரியத்தை உபவாசமிருந்து மாற்றிவிட நினையாதிருங்கள்.

அக்கினிக்குள் கடந்து வந்த உங்களை, நெருக்கங்களுக்குள் சிக்கியிருக்கும் மற்றவர்களை ஆறுதலும், தேறுதலும் படுத்த தேவ ஆவியானவர் பயன்படுத்துகிற பாத்திரமாக இருப்பீர்கள். கர்த்தர் நாமம் மகிமைப்படட்டும்.

## இரத்தின சுருக்கமாக 3 ம் அதிகாரம்:

நேபுகாத்நேச்சார் பொற்சிலையை (விக்கிரகத்தை) உண்டாக்கி அதை பணிந்து கொள்ள வேண்டும் என்று கட்டளை கொடுத்தான். ஆனால் யூத வாலிபர்கள் அதை ஏற்றுக் கொள்ள வில்லை. அப்படி செய்யவும் இல்லை. ஆகவே கல்தேயரில் சிலர் இராஜ சமூகம் வந்து (3:8-12) அவர்கள் உம்மை மதிக்கவில்லை. உம்முடைய தேவர்களையும் அவர்கள் பணிந்து கொள்ளவில்லை. நீர் நிறுத்தின பொற்சிலையும் அவர்கள் பணிந்து கொள்ளவில்லை என்றனர். ஓட்டுமொத்தத்தில் அன்று நேபுகாத்நேச்சாரின் வார்த்தையில் காணப்பட்ட சவால்களில் (3:13-16)தேவனாகிய கர்த்தருக்கும் யூத விசுவாசிகளான இந்த வாலிபர்களுக்கும் இது ஒரு பெரிய சவாலாக இருந்தது.

இப்படிப்பட்ட சவால்களை வாலிபர்கள் முன்னோக்கோடு எடுத்தனர்.(3:17-18)

இராஜாவின் கையிலிருந்து எங்களை நாங்கள் ஆராதிக்கிற தேவன் விடுவிப்பார் என்று உறுதியாய் விசுவாசித்தனர். தேவன் அவர்களை விடுவிக்காமற்போனாலும் நேபுகாத்நேச்சாரின் பொற்சிலையை தெய்வமாக ஏற்பது இல்லை. சிலையை கடவுளாக வழிபடுவதுமில்லை என்று இராஜாவுக்கு தெளிவுபடுத்தினர்.

இராஜாவின் உக்கிர கோபத்தால் அக்கினி சூளையில் போடப்பட்டார்கள்.(3:24-27) அவர்கள் சரீரங்கள் தீயினால் சேதப்படுத்தப்படவில்லை. அவர்கள் தலைமயிர் கருகாமலிருந்தது. அவர்களது மெல்லிய ஆடைகளும் தீப்பற்றவில்லை. தீயின் புகை கூட அவர்கள் மீது வீசவில்லை. இந்த பெரிய அற்புதத்தை கண்டு நேபுகாத்நேச்சார் இவர்களின் தேவனே உன்னதமான தெய்வம் என்று சாட்சி பகர்ந்தான்.(3:28) இவர்களை காக்கும் படியாக தேவன் இரங்கி வந்தார். தேவன் தம்மை நம்புகிறவர்களை விடுதலையாக்குகிறார்.

தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பதற்காக அரசனின் அவசியமற்ற கட்டளையை தள்ளினார்கள். தங்கள் சரீரங்களை ஒப்புக் கொடுத்தனர். இவ்விதமாக விடுவிக்கக்கூடிய வேறொரு தெய்வம் இல்லை என்று சாட்சி பகர்ந்தனர். அதன் பின் இராஜா அவர்களை உயர்த்தினான். இது அவர்களுக்கு கிடைத்த இரண்டாவது பதவி உயர்வு. ஆமென்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

24. அப்பொழுது ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பிரமித்து, தீவிரமாய் எழுந்திருந்து, தன் மந்திரிமார்களை நோக்கி: மூன்று புருஷரை அல்லவோ கட்டுண்டவர்களாக அக்கினியிலே போடுவித்தோம் என்றான்; அவர்கள் ராஜாவுக்குப் பிரதியுத்தரமாக: ஆம், ராஜாவே என்றார்கள்.
25. அதற்கு அவன்: இதோ, நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன்; அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை; நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றான்.
26. அப்பொழுது நேபுகாத்நேச்சார் எரிகிற அக்கினிச்சூளையின் வாசலண்டைக்கு வந்து, உன்னதமான தேவனுடைய தாசராகிய சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களே, நீங்கள் வெளியே வாருங்கள் என்றான்; அப்பொழுது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் அக்கினியின் நடுவிலிருந்து வெளியே வந்தார்கள்.
27. தேசாதிபதிகளும், அதிகாரிகளும், தலைவரும், ராஜாவின் மந்திரிகளும் கூடிவந்து, அந்தப் புருஷருடைய சரீரங்களின்மேல் அக்கினி பெலஞ்செய்யாமலும், அவர்களுடைய தலைமயிர் கருகாமலும், அவர்களுடைய சால்வைகள் சேதப்படாமலும், அக்கினியின் மணம் அவர்களிடத்தில் வீசாமலும் இருந்ததைக் கண்டார்கள்.
28. அப்பொழுது நேபுகாத்நேச்சார் வசனித்து: சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர்கள் தங்களுடைய தேவனைத்தவிர வேறொரு தேவனையும் சேவித்துப் பணியாமல், அவரையே நம்பி, ராஜாவின் கட்டளையைத் தள்ளி, தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்ததினால், அவர் தமது தூதனை அனுப்பி, தம்முடைய தாசரை விடுவித்தார். 29. ஆதலால் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு விரோதமாகத் தூஷணவார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும், எந்த ஜாதியானும், எந்தப் பாஷைக்காரனும் துண்டித்துப்போடப்படுவான்; அவன் வீடு எருக்களமாக்கப்படும் என்று என்னாலே தீர்மானிக்கப்படு கிறதுஇ இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லையென்றான். 30. பின்பு ராஜா சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைப் பாபிலோன் தேசத்திலே உயர்த்தினான்.